பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**28 01 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்குவதையொட்டி இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உரையாற்றுகிறார்.

**2.** பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தில்லியில் நடைபெறும் தேசிய மாணவர் படையின் வருடாந்திர பேரணியில் உரையாற்ற உள்ளார்.

**3.** இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தமிழக ஜவுளித்துறைக்கு பெரிதும் பலனளிக்கும் என்ற மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

**4.** திமுக கூட்டணியில் குழப்பம் நீடிப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

**5.** இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 4வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

**--- இனி விரிவான செய்திகள் ---**

<<<<>>>>

**நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது.**

**இந்த ஆண்டின் முதல் கூட்டத்தொடர் என்பதால் இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு உரையாற்றுகிறார்.**

**பொருளாதார ஆய்வறிக்கை நாளை தாக்கல் செய்யப்படுகிறது.**

**மத்திய பட்ஜெட் வரும் ஞாயிற்றுக்கிழமை தாக்கல் செய்யப்பட உள்ளது.**

**இன்று தொடங்கும் நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் முதற்கட்டம் அடுத்த மாதம் 13ஆம் தேதி வரை நடைபெறும்.**

**இரண்டாம் கட்ட கூட்டத்தொடர் மார்ச் மாதம் 30ஆம் தேதி தொடங்கி ஏப்ரல் மாதம் 2ஆம் தேதி வரை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இந்த கூட்டத்தொடர் மொத்தம் 30 அமர்வுகளைக் கொண்டிருக்கும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.**

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தில்லியில் நடைபெறும் தேசிய மாணவர் படையின் வருடாந்திர பேரணியில் உரையாற்ற உள்ளார்.

கடந்த ஒரு மாத காலமாக நடைபெற்ற தேசிய மாணவர் படையின் குடியரசு தின முகாமின் பிரம்மாண்டமான நிறைவு விழாவையொட்டி இந்த பேரணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் பேரணி 'தேசமே முதல் - கடமை உணர்வுள்ள இளைஞர்கள்' என்ற கருப்பொருளின் கீழ் நடைபெறுகிறது.

இது இந்திய இளைஞர்களிடையே நிலவும் கடமை உணர்வு, ஒழுக்கம் மற்றும் தேசப்பற்றைப் பிரதிபலிக்கிறது.

நாடு முழுவதிலும் இருந்து 898 மாணவிகள் உட்பட மொத்தம் 2,406 தேசிய மாணவர் படையினர் இந்த முகாமில் பங்கேற்றுள்ளனர்.

மேலும், 21 வெளிநாடுகளைச் சேர்ந்த 207 இளைஞர்கள் மற்றும் அதிகாரிகளும் இந்தப் பேரணியில் கலந்து கொள்கின்றனர்.

தேசிய மாணவர் படையினர் நாட்டு நலப்பணித் திட்ட உறுப்பினர்கள் இணைந்து வழங்கும் கண்கவர் கலை நிகழ்ச்சிகளும் இந்தப் பேரணியின் நிறைவில் நடைபெறவுள்ளது.

<<<<>>>>

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் சுமூகமாக நடைபெற அனைத்து அரசியல் கட்சிகளும் அரசுக்கு ஒத்துழைக்கு வேண்டும் என்று நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு கேட்டுக்கொண்டுள்ளார்.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பட்ஜெட் கூட்டத்தொடரின் முதற்கட்டத்தில் குடியரசுத்தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது விவாதம் நடைபெறும் என்று கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான ஊரக வேலைவாய்ப்பு உறுதி மற்றும் வாழ்வாதார சட்டத்தை திரும்பப் பெறும் எண்ணம் அரசுக்கு இல்லை என்று அவர் தெளிவுபடுத்தினார்.

ஏற்கனவே நாடாளுமன்றத்தில் அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு அமலுக்கு வந்துள்ளதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

<<<<>>>>

இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் தமிழக ஜவுளித்துறைக்கு பெரிதும் பலனளிக்கும்

என்ற மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் குறித்து சமூக வலைதளத்தில் கருத்து தெரிவித்துள்ள அவர், நாடு முழுவதும் அனைத்து தொழில்துறைகளும் ஒருங்கிணைந்த வளர்ச்சியை அடையும் என்று கூறியுள்ளார்.

குறிப்பாக தமிழகத்தில் திருப்பூர், ஈரோடு போன்ற மாவட்டங்களும், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் உள்ள ஜவுளி நிறுவனங்கள் மற்றும் ஆடைகளுக்கு சாயமேற்றும் தொழிற்சாலைகள் பலனடையும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தொழிற்சாலைகள் ஐரோப்பிய நாடுகளுடன் **263** பில்லியன் டாலர் அளவுக்கு வர்த்தகத்தில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்டோமொபைல், தோல்பொருட்கள், கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதி அதிகரிக்கும் என்றும் டாக்டர் எல். முருகன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

சென்னை துறைமுகத்தில் 54 கோடி ரூபாய் மதிப்பிலான 4 திட்டங்களை மத்திய கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறையின் செயலாளர் திரு. விஜயகுமார் நேற்று தொடங்கி வைத்தார்.

அந்தமான் நிகோபார் செல்லும் பயணிகளின் வசதிக்காக புதிதாக 29 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள பயணிகள் முனையத்தை அவர் திறந்து வைத்தார்.

சுமார் 23 கோடி ரூபாய் செலவில் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கப்பல் போக்குவரத்து கண்காணிப்பு அமைப்பையும் அவர் தொடங்கி வைத்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்டுவதற்கு சென்னை துறைமுகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகளையும் திரு. விஜயகுமார் நேற்று ஆய்வு செய்தார்.

<<<<>>>>

திருச்சியை இரண்டாவது தலைநகரமாக அறிவிக்க வேண்டும் என்று மாநில அமைச்சர்கள் திரு. கே.என். நேரு, திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் வலியுறுத்தியுள்ளனர்.

சட்டப்பேரவைத் தேர்தலையொட்டி திமுக அமைத்துள்ள தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவிடம் இதற்கான கோரிக்கையை அளித்துள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

திருச்சியில் வேளாண் பல்கலைக்கழகம், பல் மற்றும் சித்த மருத்துவக் கல்லூரிகள் அமைக்க வேண்டும், குடமுருட்டியில் தடுப்பணையுடன் கூடிய பாலம் கட்ட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

<<<<>>>>

திமுக கூட்டணியில் குழப்பம் நீடிப்பதாக பிஜேபி மாநில தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக - காங்கிரஸ் கட்சியினரிடையே கூட்டணி ஆட்சி குறித்து நடைபெற்று வரும் மோதல்களை சுட்டிக்காட்டினார்.

தேசிய ஜனநாயக கூட்டணியைப் பொறுத்தவரை அனைவரும் தாமாக முன்வந்து ஒன்றுசேர்ந்தள்ளதாக கூறினார்.

தமிழகத்தில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அஇஅதிமுக தலைமை தாங்குவதால், அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு.

எடப்பாடி பழனிசாமி கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளுடன் பேச்சு நடத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

தேசிய ஜனநாயக கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இடம்பெற வாய்ப்புள்ளதாகவும் திரு. நயினார் நாகேந்திரன் கூறினார்.

<<<<>>>>

குடியரசு தினத்தன்று பணியாளர்களுக்கு விடுமுறை அளிக்காத நிறுவனங்கள் மீது தொழிலாளர்துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் தொழிலாளர் நல ஆணையரகத்தின் அதிகாரிகள் குன்னூர், உதகமண்டலம், கோத்தகிரி, கூடலூர் பகுதிகளில் இயங்கும் கடைகள், வணிக நிறுவனங்கள் மற்றும் உணவகங்களில் குடியரசு தினத்தன்று ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வில் ஊழியர்களுக்கு விடுமுறையோ, அல்லது மாற்று விடுமுறையோ அளிக்காமல் இரட்டிப்பு சம்பளமும் வழங்காமல் அரசு விடுமுறை தினத்தன்று பணிக்கு அமர்த்தியதாக 33 நிறுவனங்கள் கண்டறியப்பட்டது.

அந்த நிறுவனங்கள் மீது சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக தொழிலாளர் நலத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

இந்தியா-ஐரோப்பிய யூனியன் இடையே ஏற்பட்டுள்ள தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தால் இறக்குமதி வரிகள் குறையும் என்று நம்புவதாக இந்தியாவுக்கான அயர்லாந்து தூதர் திரு. **Kevin Kelly** தெரிவித்துள்ளார்.

-----------

ரஷ்யா-யுக்ரைன் போர் முடிவுக்கு வருவதையே இந்தியா விரும்புவதாக வெளியுறவுத்துறை செயலர் திரு. விக்ரம் மிஸ்ரி தெரிவித்துள்ளார்.

-----------

புதுதில்லி வந்துள்ள ஐரோப்பிய கவுன்சில் தலைவர் திரு. **Antonio Costa** மற்றும் ஐரோப்பிய ஆணையத்தின் தலைவர் திருமதி **Ursula Vonder,** குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணனை சந்தித்துப் பேசினார்.

-----------

கர்நாடகாவில் உள்ள **6** ஆயிரம் பஞ்சாயத்து அலுவலகங்கள் பெயர் மகாத்மா காந்தி பஞ்சாத்து அலுவலகங்கள் என்று பெயர்

மாற்றம் செய்யப்படும் என்று அம்மாநில துணை முதலமைச்சர் திரு. டி.கே. சிவகுமார் தெரிவித்துள்ளார்.

-----------

பிளைவுட் மற்றும் மரச்சாமான் உற்பத்தி நிறுவனங்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சியை சென்னையில் நேற்று இந்திய தர நிர்ணய அமைவனம் நடத்தியது.

-----------

மன்னார்குடி ராஜகோபாலசுவாமி கோவில் குடமுழுக்கு விழா இன்று நடைபெற உள்ளதால் திருவாரூர் மாவட்டத்தில் பள்ளி கல்லூரிகளுக்கு இன்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

-----------

காஞ்சிபுரத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் தூய்மைப் பணியாளர்களுக்கான அடையாள அட்டைகளை மாநில தூய்மைப் பணியாளர் நலவாரிய தலைவர் திரு. வே. ஆறுசாமி, மாவட்ட ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் ஆகியோர் வழங்கினர்.

-----------

சென்னை பிராட்வே பேருந்து நிலையத்தில் பன்னோக்கு ஒருங்கிணைந்த போக்குவரத்து முனையம் அமைக்கும் பணிகளை அமைச்சர் திரு. சேகர் பாபு நேற்று ஆய்வு செய்தார்.

-----------

சென்னை பாரதி மகளிர் கலை, அறிவியல் கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு விலையில்லா மடிக்கணினிகளை மாநகராட்சி மேயர் திருமதி ப்ரியா நேற்று வழங்கினார்.

-----------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 4வது ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெற உள்ளது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற உள்ள இந்தப் போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

--------------

**19** வயதுக்குட்பட்டோருக்கான ஆடவர் உலகக் கோப்பை ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்தியா **204** ரன் வித்தியாசத்தில் ஜிம்பாப்வே அணியை வென்றது.

**Bulawayo-**வில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட **50** ஓவர் முடிவில் **8** விக்கெட் இழப்புக்கு **352** ரன் எடுத்தது.

**353** ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய ஜிம்பாப்வே அணி **37** புள்ளி **4** ஓவரில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து **148** ரன் எடுத்து தோல்வியைத் தழுவியது.

--------------

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் குஜராத் அணி **3** ரன் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்றது.

**<<<<The End>>>>**